பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 17 | செவ்வாய்க்கிழமை | 30.04.2024 | அதிர்வு 273

## வெற்றிக் கட்சியாக சு.கவை மாற்றுவேன்

### சந்திரிகா அம்மையார் சூளுரை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக மாற்றுவேன் என்று 06▶





### முதலில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பு வந்தால்

# ஆளுந்தரப்பிலிருந்து 45 பேர் சஜித் அணிப் பக்கம் தாவல்?

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் அறிவிப்பு வந்தால் தற்போதைய ஆளுந்தரப்புப் பக்கத்தில் இருந்து சஜித் தலைமையிலான கூட்டணியில் 45 பேர் இணைவார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷக்களின் மொட்டுக் கூட்டணியில் போட்டியிட்டால் தோல்வி கிடைக்கும் என்ற அச்சம் காரணமாகவே அவர்கள் சஜித் கூட்டணியில் இணைவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. 06▶



## எந்தத் தேர்தல் முதலில் என்று இப்போது சொல்ல முடியாதாம்

### பிரதமர் தினேஷ் கூறுகின்றார்

நாட்டின் தற்போதைய நிலைமையில் எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று இப்போது கூற முடியாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

எனினும், இந்த வருடமும், அடுத்த வருடமும் தேர்தல் வருடங்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். 06▶

## சஜித் அணியிலிருந்து விலகுகிறார் விஜயமுனி

### சுயாதீனமாகச் செயற்பட முடிவு



ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுவதற்கு முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தீர்மானித்துள்ளார்.

தனக்கு இன்னும் அமைப்பாளர் பதவி எதுவும் வழங்கப்படவில்லை என்றும், கட்சி உறுப்புரிமை மட்டுமே உள்ளது என்றும், தற்போது ஓரங்கட்டப்பட்டுள்ளேன் என்றும் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அமைச்சுப் பதவி வகித்த 06▶




பெரும் மதிப்புக்குரிய ஈழவேந்தன் ஐயா காலமாகிவிட்டார். அவர் பற்றிய சில நினைவுகள் நிழலாடுகின்றன. அவற்றைப் பகிர விரும்புகிறேன்.

ஈழவேந்தன் இரண்டு தடவைகள் இந்தியாவிலிருந்து இந்திய அரசினால் நாடு கடத்தப்பட்டார். முதல் தடவை 2000ஆம் ஆண்டு முற்பகுதியில் என்று நினைக்கிறேன். அடுத்த தடவை அவர் எம்.பியாக இருந்த காலத்தில். இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 'சார்க்' நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கான விசா அவசியமில்லை என்ற ஏற்பாட்டை வைத்து, இலங்கையின் இராஜதந்திர கடவுச்சீட்டுடன் தமிழகம் போய் இறங்கிய அவரை, அங்கிருந்து இந்தியா உடனேயே கொழும்புக்குத் 06▶





# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் கறுவா விளைச்சலை விரிவுபடுத்தத் திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு விவசாயத்திற்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. கடந்த காலங்களில் நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பயிராக இருந்த கறுவாச் செய்கையை பிரபலப்படுத்தும் வேலைத்திட்டம் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற டில்மா சினமன் வர்த்தக நாமத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“சிலோன் டீ” என்ற பெயரை சர்வதேச சந்தைக்கு கொண்டு சென்ற டில்மா வர்த்தக நாமம், தனது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் உள்நாட்டு ஏற்றுமதியை மேலும் விரிவுபடுத்தி இலங்கையின் கறுவாத் தொழிற்துறையில் பிரவேசித்து டில்மா வர்த்தக நாமத்தின் கீழ் உயர்தர கறுவா உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக சமையல் கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் மாஸ்டர் செஃப் தோமஸ் குக்லர் ஆகியோர் டில்மா கறுவா தயாரிப்புகளை அடையாள ரீதியில் வெளியிட்டனர்.

இதன்போது ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“கறுவாப் பயிர் விவசாயம் அக்காலத்தில் நம் நாட்டின் முக்கிய பயிராக இருந்தது. பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர், தென்மேற்கு ஈரவலயப் பிரதேசத்திற்கு எமது இராச்சியங்கள் இடம்பெயர்ந்த போது, கறுவாத் தொழில்தான் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசென்றது.

எங்களிடம் கறுவா இல்லை என்றால் தம்பதெனிய, யாப்பஹுவ, கம்பளை, ரைகம, கோட்டே ஆகிய இராச்சியங்கள் தோன்றியிருக்காது. இப்படித்தான் கறுவா நம் நாட்டின் வரலாற்றோடு இணைக்கப்பட்டுள்ளது. இவர்களில் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் மிகவும் அதிர்ஷ்டசாலி. அவரிடம் யானைகளும் முத்துகளும் இருந்தன. ஆனால், கறுவா தொழிலில் தனக்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும் என்று நினைத்தார். அதன்படி புத்தளத்தை கைப்பற்றி அங்குள்ள ஆட்சியாளர்களிடம் கப்பம் வாங்கினார். ஆனால், அது போதாது என்று எண்ணி வர்த்தகத்தை கட்டுப்படுத்த முடிவு செய்தார். அதன்படி அவர் அங்கிருந்து ரைகம மற்றும் கோட்டே இராச்சியங்களைக் கைப்பற்றினார்.

வியாபாரத்தை கட்டுப்படுத்திய கேரள வியாபாரிகள், இவரை இப்படியே தொடர விட முடியாது என நினைத்தனர். எனவே அவர்கள் ஒரு கோட்டையைக் கட்டி, ஆர்ய சக்ரவர்த்தியை தோற்கடிக்க தங்களில் முதன்மையான அழகேஸ்வரரை இங்கு அனுப்பினார்கள். எனவே இது நமது வரலாற்றின் மற்றொரு பகுதி.

ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் கறுவாத் தொழில் முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியவன் என்பதாலேயே மலையக இராச்சியத்தைக் கைப்பற்றினான் என வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த இராச்சியத்தின் அதிசயம் செலலிஹினியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்த்துக்கேயர்களுடன் போரிட்ட சீதாவக்க ராஜசிங்க மன்னன், போர்த்துக்கேயரை மலையகக் கோட்டைக்குள் மட்டுப்படுத்தினான்.

கொழும்பு கோட்டை மற்றும் நீர்கொழும்பு கோட்டையையும் அவன் கைப்பற்றினான். அவரது இராச்சியத்திலும் கோட்டே இராச்சியத்திலும் சேகரிக்கப்பட்ட அனைத்து கறுவாவும் அவருக்குக் கீழ் வைக்கப்பட்டன. பின்னர் அந்த அனைத்திலும் உயர்தர கறுவாவை மட்டும் விட்டுவிட்டு, தரம் குறைந்த கறுவா அனைத்தையும் எரித்துவிட்டார். இந்த வகையில், கறுவா தொழில் எங்கள் இராச்சியங்களுடன் இணைக்கப்பட்டது.

மேலும், மலையக இராச்சியத்தை பராமரிப்பதற்கான பணம் கறுவா தொழிலில் இருந்து கிடைத்தது. ஆனால் கறுவாவுக்குப் பதிலாக கோபி, டீ என்பன வந்ததால், கறுவாவின் விலை வீழ்ச்சியடைந்ததோடு மொத்த நிலையும் மாறியது. ஆனால் இலங்கை கறுவா உலகிலேயே சிறந்த கறுவா என்ற அங்கீகாரம் இன்னும் உள்ளது.

டில்மா நிறுவனம் “சிலோன் டீ“ என்ற பெயரை புத்துயிர் பெறச்செய்தது போல் “சிலோன் சினமன்“ என்ற பெயரையும் புத்துயிர் பெறச்செய்துள்ளது. அதற்கு நான் நன்றி கூறுவதுடன், இந்த நாட்டின் பொருளாதாரத்தில் இது ஒரு புதிய பயணத்தின் ஆரம்பம் என்றும் நான் நம்புகிறேன்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதில் விவசாயத்திற்கு அதிகபட்ச பங்களிப்பை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். சிங்கள மன்னன் காலத்திலிருந்து 1948 இல் பிரித்தானிய ஆட்சியிலிருந்து நாம் சுதந்திரம் பெறும் வரை விவசாயமே எமது பிரதான பொருளாதார அமைப்பாக இருந்தது.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டை மீண்டும் விவசாய பொருளாதாரத்திற்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளோம். அதற்கு தேவையான புதிய சட்டங்களை கொண்டு வர எதிர்பார்க்கிறோம்.

இத்திட்டத்தை அரசதுறை மற்றும் தனியார் துறையினர் ஆதரிக்க வேண்டும். டில்மா நிறுவனத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், மேலும் உங்களுக்குத் தேவையான எந்த ஆதரவையும் வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.” – என்றார்.

**(மேலதீக படங்கள் 3ஆம் பக்கத்தில்...)**





# 49 சுற்றுலா இடங்களை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை

## சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தகவல்

“சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக மேலும் 49 சுற்றுலா இடங்களை இனங்கண்டுள்ளோம். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அவற்றை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.”

– இவ்வாறு சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு நடக்கும் தொல்லைகள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. நான் இது குறித்து குரல் எழுப்பி வருகின்றேன். சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக விலைக்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்தல், சுற்றுலாத் தலங்களுக்கு செல்லக் கூடிய ரயில் டிக்கெட்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் மற்றும் குறிப்பாக இலங்கை தொடர்பில் பிரபல்யப்படுத்தி பிரச்சார வீடியோக்களை ஒளிபரப்பி வருகின்ற ஒரு சுற்றுலாப் பயணியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை போன்ற பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இவ்வாறு ஒரு சிலரால் நமது நாட்டின் நற்பெயருக்கு பங்கம் ஏற்பட வழிவிடக்கூடாது. அதிக விலைக்கு ரயில் டிக்கெட் விற்பனை செய்தல் தொடர்பில் குறிப்பிடுவதாயின் அவை பெரும்பாலும் ஊழல் மிக்க அதிகாரிகளின் ஆதரவுடனேயே இடம்பெறுகின்றன. இவற்றைத் தடுப்பதற்காகவே ஒன்லைன் முறையில் டிக்கெட் கொள்வனவு செய்வதை முறைமைப்படுத்தி வருகின்றோம். இம்முறையை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன் மூலம் இவ்வாறான ஊழல் மோசடிகளைக் கட்டுப்படுத்த முடியும்.

அதேபோன்று, சட்டவிரோத மது விற்பனையால் எமது நாட்டுக்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான வரி வருமானம் இழக்கப்படுகின்றது. எமது நாடு பௌத்த நாடு என்றபடியால் நாம் பௌத்த மதத்திற்கு செய்யும் கௌரவமாக போயா தினத்தில் இந்த நாட்டில் மது விற்பனை நிலையங்கள் மூடப்படுகின்றன.

ஆனால், அவ்வாறான தினங்களிலும் எமது நாட்டு மக்களே சட்ட விரோதமாக மது விற்பனை செய்கின்றனர். அவற்றைத் தடுக்கச் செல்லும் அதிகாரிகளும் லஞ்சம் போன்ற ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு, அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்காமல் திரும்பி வருகின்றனர். இவ்வாறு ஒரு சிலர் செய்யும் ஊழல் மேசடிகளால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்த முடியாமல் உள்ளது.

இவ்வாறான மோசடிகளைத் தடுக்கவும் கண்காணிக்கவும் தனியான குழுவென்றை நியமிக்க நான் பரிந்தரைத்துள்ளேன்.

சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக மேலும் 49 சுற்றுலா இடங்களை இனங்கண்டுள்ளோம். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அவற்றை சுற்றுலா வலயங்களாக வர்த்தமானியில் வெளியிடவும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன் ஊடாக எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்த நாட்டில் இயங்கும் ஸ்பா மையங்கள் தொடர்பில் அண்மைக் காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இவை உண்மையில் ஏனைய நாடுகளில் ஆரோக்கிய மையங்களாகவே இயங்குகின்றன. மக்களின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துபவையாக அவை இருக்க வேண்டும். ஆனால் இந்த நாட்டில் அவ்வாறான இடங்களில் இடம்பெறுபவை பற்றி நான் குறிப்பிடத் தேவையில்லை.

எனவே, இந்த நாட்டு மக்களின் சுகாதாரம், ஆரோக்கியம் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றை முறைப்படுத்தி கண்காணிப்பு பொறிமுறைகளை உருவாக்க சுகாதார அமைச்சுடன் நாம் கலந்துரையாடி வருகின்றோம்.


பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் பொது மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்து இப்போதைய நிலையை விடவும் அதிகமாக மக்களுக்கு தெளிவூட்டல்கள் இடம்பெறவேண்டும்.” – என்றார்.

# விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் கறுவா விளைச்சலை விரிவுபடுத்தத் திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு













# வவுனியா ஊடாக இரண்டு லொறிகளில் 44 மாடுகலை கடத்த முயன்றோர் கைது

## மொத்தம் ஏழு பேர் சிக்கினராம்

(கே.வசந்தன்)

முல்லைத்தீவில் இருந்து பேருவளை மற்றும் கல்முனைக்கு இரண்டு லொறிகளில் நெல் கொண்டு செல்வதாகக் கூறி மாடுகளை ஏற்றிச் சென்ற ஏழு பேர் வவுனியா நகரில் 44 மாடுகளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீண்டகாலமாக இப்படி மாடுகளை ஏற்றிச் செல்கின்றனர் எனவும், பொலன்னறுவையில் உள்ள அரிசி ஆலைகளுக்கு நெல் கொண்டு செல்லும் போர்வையில் பக்க வீதிகளைப் பயன்படுத்தி மாடுகளை ஏற்றிச் சென்றனர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இரண்டு லொறிகளில் இருந்த பசுக்களில் பெரும்பாலா னவை கருவுற்ற பசுக்கள் என்றும், சில மாடுகள் நோய் வாய்ப்பட்ட விலங்குகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மற்றும் முல்லைத்தீவில் மாடு கடத்தலில் ஈடுபடுபவர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து திருடப்பட்ட மாடுகளை ஏற்றிச் செல்வதும் இதன் மூலம் தெரியவந் துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கஹட்டகஸ்திகிலிய, இகிரிகொல்லாவ மற்றும் வெலிசறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவார்.



வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சி தனபால, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சமந்த விஜேசேகர ஆகியோரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் சந்தேக நபர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்படவுள்ளனர்.

வவுனியா பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலை மைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம்.கே.அழகியவண்ண, சப் இன்ஸ்பெக்டர் ஜீவண்ண, பொலிஸ் சார்ஜன்ட் (61518) ரன்வல, பொலிஸ் கான்ஸ்டபிள் (78448) வீரசேன, பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி (18129) திஸாநாயக்க ஆகியோர் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருத்தமற்ற வாகனங்களின் கொள்வனவே வாகன இறக்குமதித் தடைக்குக் காரணமாகும்

## வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் தகவல்



"நாட்டுக்குப் பொருத்தமற்ற வாகனங்களைக் கொள்வனவு செய்தமையே வாகன இறக்குமதிக்கானத் தடைக்கு காரண மாகும்."

– இவ்வாறு வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் தலை வர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இலங்கை போன்ற நாடுகளுக்கு குறைந்த விலையில் சிறந்த வாகனங்களைக் கொள்வனவு செய்யலாம். அவ்வாறு இடம்பெறாமையே இங்கு பிரச்சினையாகியுள்ளது.

2018, 2019 ஆகிய ஆண்டுகளில் நாட்டுக்கு, பாவிக்கப்பட்ட வாகனங்களே பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றிலும் ஜப்பானிலிருந்தே அதிகளவான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அதேநேரம் ஜப்பான் வாகனங்களே தரத்தில் சிறந்தவை. அவற்றை குறைந்த விலைகளோடு தரமான வாகனங்களை இறக்குமதி செய்யலாம்.

இவ்வாறான பின்னணியில் சில வாகன இறக்குமதியாளர் கள் வாகனங்களின் திருத்தப் பணிகளுக்காக அதிக பணத் தைச் செலவிடுவதாகத் தெரிவிக்கின்றனர். ஆகையால் வாக னத்தின் விலை அதிகரிப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின் றனர்.

இந்த நிலையில், உரிய முறையில் குறைந்த விலையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தவறுகின்றனர்." – என்றார்.

# கத்தரிக்கோலினால் குத்தி அண்ணனைக் கொன்ற தம்பி

## குருவிட்ட பிரதேசத்தில் சம்பவம்

குருவிட்ட பிரதேசத்தில் இரு சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் இளைய சகோதரன் கத்திரிக்கோலால் தாக்கியதில் மூத்த சகோதரன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அண்ணன் உயிரிழந்துள்ளான் எனக் குருவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 17 வயதுடைய இளைய சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளான்.



குருவிட்ட பொலிஸார் கொலை தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாமியாரைத் தாக்கிக் கொலை செய்த மருமகன் கைது; மனைவியும் படுகாயம்

மொனராகலை நக்கல பலம ஹந்திய பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது மருமகன் கத்தியால் தாக்கியதில் மாமியார் உயிரிழந்துள்ளார். மனைவியும் காயமடைந்துள்ளார் என மொனராகலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நக்கல பகுதியைச் சேர்ந்த சேர்ந்த புஷ்பா குமாரி (வயது 44) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

அந்த நபரின் மனைவி படுகாயங்களுடன் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார் என வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

குடும்பப் பிணக்குக் காரணமாக ஏற்பட்ட தகராறில் இந்தக் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மருமகன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தன்னுடைய ஒன்பது மாதக் குழந்தையை கிணற்றில் வீசிக் கொலை செய்த தாய்!



கம்பஹா – இராகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய தாய் ஒருவர் தனது ஒன்பது மாதக் குழந்தையை கிணற்றில் வீசிக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய குழந்தையின் தாய் மஹபாகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராகம பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக குழந்தை தாயினால் வீட்டுக்கு அருகில் உள்ள கிணற்றில் வீசி கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தத் தாய் மனவுளைச்சல் காரணத்தால் இவ்வாறு செய்திருக்கக்கூடும் எனத் தெரிவிக்கும் பொலிஸார், வைத்திய பரிசோதனைகளுக்கும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

# நச்சு ரகப் போதைப்பொருட்களுடன் 18 பெண்கள் உட்பட 760 பேர் கைது

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருட்களுடன் 18 பெண்கள் உட்பட 760 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 17 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள்களுக்கு அடிமையாகியுள்ள சந்தேக நபரொருவரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 131 கிராம் ஹெரோயின், 201 கிராம் ஐஸ், 399 கிராம் கஞ்சா, 16 கிராம் ஹெரோயின் மற்றும் 134 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திரும்பவும் நாடு கடத்தியது.

இரண்டு தடவையும் கொழும்பில் அவர் வந்து இறங்கித் தடுமாறிக் கொண்டிருந்த போது அகஸ்மத்தாக கட்டுநாயக்காவில் அவரை சந்தித்தவர் 'உதயன்', 'சுடர்ஒளி' நிர்வாக இயக்குனர்தான்.

தமிழ்ப் போராளிகள் சார்பாக செயற்பட்டமைக்காக இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவருக்கு முகம் கொடுக்கவே அந்த யுத்த காலத்தில் கொழும்பில் பலரும் அஞ்சிய சமயத்தில், விமான நிலையத்திலிருந்து அவரை தம்முடன் கூட்டி வந்து, கொழும்பில் தனது இல்லத்திலும், பின்னர் 'சுடர்ஒளி' கொழும்பு அச்சகத்திலும் இடமளித்துப் பராமரித்தவர் 'உதயன்', 'சுடர்ஒளி' நிர்வாக இயக்குனரே.

அந்தச் சமயத்தில் அந்த இரண்டு பத்திரிகைகளின் ஆசிரியராக நான் கடமையாற்றிக் கொண்டிருந்தமையால் எமது அச்சகத்தில் தங்கி இருந்த ஈழவேந்தனுடன் அதிகம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவ்வேளை எங்கள் பத்திரிகையிலும் எழுத்து மூலம் அவர் அவ்வப்போது பங்களிப்பு செய்தார். தினசரி இரண்டு மணித்தியாலங்களாவது எங்கள் உரையாடல் நீடிக்கும்.

பின்னர் 2004 இல் அவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியானார்.

இரண்டு ஆண்டுகள் கழித்து, 2006 மார்ச் மாதம் அளவில் ஒரு செய்தியை முன் பக்கத்தில் நான் பிரசுரித்தேன். 18 ஆண்டுகளுக்கு முன்னர் அன்று நான் போட்ட தலைப்பு கடைசியில் நேற்றுதான் நிஜமாகி இருக்கிறது.

எனது மோசமான அந்தக் கிண்டல் தலைப்பை நட்போடும் உரிமையோடும் சகஜத்தோடும் கோபிக்காமல் அவர் ஏற்று, நளினத்தோடு உரையாடியமை எனக்கு நினைவுக்கு வருகின்றது. நடந்தது இதுதான்:-

என் நினைவு சரி என்றால் எம்.பி. ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து நாடாளுமன்றத்துக்குள் ஒரு மரண வீட்டை நடத்திக் காட்டுவது என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் அதிரடியாக தீர்மானித்தனர். இருந்த தமிழ் எம்.பிக்களில் எடையும் உயரமும் குறைந்த, மெலிதான மனிதர் ஈழவேந்தன்தான். ஆக, செத்த வீட்டுக்கு அவரே பிரேதமானார். அவரைப் படுக்க வைத்து, வெள்ளை வேட்டியால் உடல் முழுவதையும் மூடி, பிரேதமாக அவரைச் சுமந்து கொண்டு நாடாளுமன்றத்தின் மையப் பகுதிக்கு வந்து, பிரேத ஊர்வலம் நடத்தி, அழுது புலம்பி, நாடாளுமன்றத்தின் மையத்தில் ஒரு மைய வீட்டையே நடத்திக் காட்டினர் கூட்டமைப்பு எம்.பிக்கள். வேட்டியால் போர்க்கப்பட்ட ஈழவேந்தனின் உடலை தலைப்பகுதியில் செல்வராஜா கஜேந்திரன், அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி போன்றோர் சுமக்க, கால் பகுதியை செல்வம் அடைக்கலநாதன் உட்பட சிலர் சுமந்து வந்தனர் என்று நினைவு.

நாடாளுமன்றமே பதறிப் போய்விட்டது. அத்தகைய தத்ரூபமான ஒத்திகை நடிப்பு. நாடாளுமன்றப் பதில் செயலாளர் நாயகமாக இருந்த அம்மணி பதறி அடித்துக் கொண்டு வந்து நின்று கலவரப்பட்டார்.

பிரேதமாக அசையாமல் கிடந்தார் ஈழவேந்தன். சுமார் பத்து நிமிடம் நாடாளுமன்றத்துக்குள் செத்தவீட்டு அரங்கேற்றுகை முடிந்து, அவரை நாடாளுமன்ற அவைக்கு வெளியில் சக எம்.பிக்கள் சுமந்து கொண்டு வந்து இறக்கும் வரையில், அவர் ஆடவோ அசையவோ இல்லை. பிரேதமாகவே இருந்தார். மூச்சு விட்ட அசமாத்தம் கூட இருக்கவில்லை; தெரியவில்லை.

இந்த விடயங்களை எல்லாவற்றையும் நேரில் பார்த்த எனது நாடாளுமன்றச் செய்தியாளர் அங்கிருந்தபடி தொலைபேசியில் எனக்கு 'ரன்னிங் கொமண்ட்ரி' கொடுத்தபடி இருந்தார்.

இந்தச் சம்பவத்தை அழகான - சுவாரசியமான - செய்தியாக்கிய நான், நாடாளுமன்றத்துக்குள் பிரேதமாக நடித்த ஈழவேந்தனை முன்னிறுத்தி ஒரு தலைப்பிட்டேன்.

'ஈழவேந்தன் இழவுவேந்தனானார்' என்பதுதான் அந்தத் தலைப்பு.

பலரும் அதை அங்கதமாக - நகைச்சுவையாக - எடுத்துக் கொண்டனர். எனினும் அப்படித் தலைப்பிட்டமை தவறு என்று என் மீது கோபித்துக் கொண்டவர்களும் இல்லாமல் இல்லை.

ஆயினும் ஈழவேந்தன் அந்தத் தலைப்பை நன்கு ரசித்தார். கனகச்சிதம் என்று பின்னர் அவர் மெச்சினார் என்றும் கூட நினைவு உண்டு. அந்த விவரங்களை மறந்துவிட்டேன்.

விடயம் நீண்டு செல்வதால் இன்னொரு சம்பவத்துடன் முடிக்கிறேன்.

இடம், பொருள், ஏவல், தருணம், சூழல் பார்க்காமல் தமது தமிழ் உரிமைக் கொதிப்பை - பேச்சை - எந்த இடத்திலும் கட்டவிழ்த்துக் கொட்டுவார் ஈழவேந்தன். கள்ளமில்லாத - வஞ்சகமில்லாத - மனதினர். நாடாளுமன்றத்தில் அவருக்கு நான்கு, ஐந்து இருக்கைகள் தள்ளி இருக்கும் சக தமிழ் எம்.பிக்களில் யாரேனும் ஒருவர் திடீரென அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுப்பார். எந்த இலக்கத்திலிருந்து, யாரிடம் இருந்து வருகின்றது என்று அவதானிக்கும் திறமை கூட ஈழவேந்தனிடம் இருக்காது. அவர் தொலைபேசி ஒலித்ததும் எடுத்துப் பேசுவார்.

"ஐயா! நாங்கள் 'இன்ன' ஊடகத்திலிருந்து பேசுகிறோம்" என்று குறிப்பிட்டு, ஒரு விடயத்தை பற்றி கேள்வி எழுப்புவார் அவரின் சக எம்.பி.

பேசுபவர் தமது பக்கத்தில் இருக்கும் தமது சகா என்று தெரியாமல், அவரை ஏதோ ஓர் ஊடகத்தின் பிரதிநிதி என்று கருதி 5 முதல் 10 நிமிடங்களுக்கு நீட்டி முழக்குவார் ஈழவேந்தன. சக எம்.பிக்கள் இதனை ஒரு கிண்டல் வேலையாக அவ்வப்போது செய்வதுண்டு.

ஒரு தடவை கிளிநொச்சியில் சமாதான செயலகத்தில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்தித்து, தனியாக ஆற அமர இருந்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்த போது இது குறித்துக் குறிப்பிட்டேன். ஈழவேந்தன் பற்றிக் குறை கூறினேன் நான். தமிழ்ச்செல்வன் குறுக்கிட்டார்.

"அண்ணை... அப்படிச் சொல்லாதீர்கள். அவர் ஓர் அறிவுக்கடல். காட்டாறு போன்றவர். காட்டாறு பெருக்கெடுத்தால் அது ஒழுங்கு முறையில் ஓடாது. அதற்கு அணை, கரை எல்லாம் இல்லை. அது தன் பாட்டில் பாயும். நாங்கள்தான் எங்கள் தேவைக்கு ஏற்ப காட்டாற்றுக்கு அணை கட்டி, அதை வழிப்படுத்தி, நமது தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" - என்றார் தமிழ்ச்செல்வன்.

ஈழவேந்தனின் தமிழ்ப் பற்றையும் தமிழ் மீதான அவரின் அபரிமிதமான வெறியையும் காட்டாறு என்று அன்று தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டமை என் மனதில் ஆழமாகப் பதிந்து கொண்டது.

இன்று காட்டாறு அடங்கிவிட்டது. நேற்றுத்தான் ஈழவேந்தன் இழவுவேந்தன் ஆனார்.

ஓர் உண்மை ஈழப் பற்றாளனை தமிழர் தேசம் இழந்துவிட்டது...!

## வெற்றிக் கட்சியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூளுரைத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

இது தொடர்பில் தெற்கு ஊடகம் ஒன்றிடம் அவர் கருத்துரைக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து மைத்திரியால் வெட்டப்பட்ட நிறைய ஆட்களின் பெயர்கள் என்னிடம் உள்ளன.

எனக்குத் தேர்தலில் போட்டியிடும் திட்டம் இல்லை. எனது தாயும் தந்தையும் கஷ்டப்பட்டு உருவாக்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழிந்துகொண்டு போவதைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. அதைக் காப்பாற்றுவதற்காகவே நான் கட்சியின் விவகாரத்தில் தலையிட்டுள்ளேன்.

நிச்சயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிக் கட்சியாக என்னால் மாற்ற முடியும்." - என்றார்.

## எந்தத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எந்தத் தேர்தலையும் எந்நேரத்திலும் எதிர்கொள்ள ஆளுந்தரப்பு தயாராகவே இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

ஆளுந்தரப்பை அனைத்து எதிர்க்கட்சிகளும் கூட்டிணைந்தாலும் கூடத் தோற்கடிக்கவே முடியாது என்றும் பிரதமர் தினேஷ் மேலும் தெரிவித்தார்.

## ஆளுந்தரப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு இணையும் அந்த 45 பேரில் இந்நாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள் அடங்குவார்கள் என்று சொல்லப்படுகின்றது.

அதற்கான பேச்சுக்கள் தற்போதே திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன என்றும் கூறப்படுகின்றது.

எனினும், முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் கள நிலைமை மாறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தல் அல்லாமல் முதலில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்தால் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பல எம்.பிக்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைவார்கள் என்று சொல்லப்படுகின்றது.

## சஜித் அணியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விஜித் விஜயமுனி சொய்சா, அதன்பின்னர் மைத்திரி தரப்புடன் இணைந்தார். பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் அவர் போட்டியிட்டார். எனினும், நாடாளுமன்றம் தெரிவாகவில்லை.

இந்நிலையிலேயே அவர் சுயாதீனமாகச் செயற்படும் முடிவை எடுத்துள்ளார்.



# இலங்கையின் உயர்ந்த மனிதன் புதுக்குடியிருப்பின் கஜேந்திரன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் இலங்கையில் மிகவும் உயரமான மனிதனாக குணசிங்கம் கஜேந்திரன் வசித்து வருகின்றார்.

இவர் 7 அடி 2 அங்குலம் உயரத்தினை கொண்டிருப்பத னாலேயே இலங்கையில் தற்போது உயரமான மனிதனாக இடம் பிடித்துள்ளார்.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான 45 வயதுடைய இவர் முச்சக்கர வண்டிச் சாரதியாக இருக்கின்றார். இவர் அதிக உயரமாக இருப்பதனால் முச்சக்கரவண்டிக்குள் அமர்ந்திருப்பது கூட கடினமானதாகும்.

தனது அசாதாரண உயரத்தால் எண்ணற்ற பிரச்சினை களைச் சந்திக்க நேரிடுவதாகவும், இலங்கையில் தனது கால்களின் நீளத்திற்கு ஏற்ற பாதணிகளை எடுக்க முடிய வில்லை எனவும் அவற்றை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பஸ் இருக்கைகள் கிடைக்காதுவிட்டால் பயணிப்பது சிரமமானது எனவும் நீண்ட தூரம் பஸ்ஸில் பயணிப்பதாக இருந்தால் இருக்கைக்கு முன்பதிவு செய்ய வேண்டிய கட்டா யமாக ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதீத வரி அதிகப் பாதிப்பு

அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள், முறைமைகள் மற்றும் அரச வருவாயை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை மறு மதிப்பீடு செய்யுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையிலான பொது நிதிக்கான குழு (கோப் குழு) அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்மண் தெரியாமல் வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டு அவை மிக அதிகமாக இருக்கும் போது, வரி விதிக்கப்பட்ட முதலீடு மற்றும் நுகர்வு போன்ற நடவடிக்கைகள் குறைந்து, நாட்டின் வருவாயில் அது வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது என்று சுட்டும் கோப் குழுத் தலைவர், அதே போன்று வரி விகிதங்கள் மிகக் குறைவாக இருக்கும் போதும், அவை நாட்டுக்குப் போதுமான வருவாயை வழங்கத் தவறிவிடுகின்றன என்று விளக்குகின்றார்.

ஆகவே, இவை இரண்டுக்கும் நடுவில் காத்திரமான - சாத்தியமான - உச்சப் பலன் நாட்டுக்குக் கிடைக்கத் தக்க விதத்தில் - வரிக் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும், வரி விதிப்புகள், முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று கோப் குழுத் தலைவர் கூறுவதில் அர்த்தங்கள் அதிகம் உண்டு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் சில வரிகளைக் கண் மூடித்தனமாக நீக்கியது. அதனால் நாட்டுக்குப் பெருத்த நிதி இழப்பு என்றால், மறுபக்கத்தில் அரச வருமானத்தின் பங்கிலும் சிலவற்றை அந்த அரசு குறைத்தது. முறையான ஆலோசனை, விளைவுகள் பற்றிய சரியான புரிதலின்றி முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களினாலும், நடவடிக்கைகளினாலும், நாடு மிக மோசமான கட்டத்தை அடைந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

மறுபுறத்தில் இப்போது தர்க்கரீதியான பகுத்தறிவு மற்றும் புத்திசாலித்தனமான ஆலோசனைக்கு உட்படாமல், வரிகளை உயர்த்துவது மட்டுமே நாட்டின் வருவாயை உயர்த்துவதற்கான ஒரேவழி என்றதவறான எண்ணத்தில் அரசாங்கம் தொடர்ந்து உழல்கிறது.

இந்தப் போக்கு அரசாங்கம் எதிர்பார்க்கும் வரி மூலமான வருமான அதிகரிப்பைத் தராது என்றும் கோப் குழு தரப்புச் சுட்டுகின்றது.

மனசாட்சியற்ற முறையில் வரி அதிகரிப்பு மற்றும் விதிப்புகளை மேற்கொள்வது மக்கள் மத்தியில் வரி தவிர்ப்பு அல்லது ஏய்ப்புக்கு வழிவகுப்பதுடன், களவான - மறைமுகமான - பாதாள உலகப் பொருளாதாரத்தையும் அது ஊக்குவிக்கிறது என்றும் விளக்கப்படுகின்றது.

நாட்டின் வருவாய்த் தேட்டத்துக்காக வரிகள் அதிகரிக்கப்படுகின்றன என்று சளாப்பல் காரணம் கூறும் அரசு, சேமிப்பை அதிகரிக்கச் செய்யக் கூடிய விதத்தில் தனது வீண் செலவுகளை குறைத்துக் கொள்வதற்கான ஒழுங்குகளைக் கூடச் செய்யவில்லை எனச் சுட்டப்படுகிறது.

வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வாக்குச் சுருட்டலுக்கான எத்தனமாகக் கண்ணை மூடிக் கொண்டு நலன்புரி செலவினங்களை அரசு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நிவாரண விநியோகத்தை வாரி வழங்கி மேற்கொள்கின்றது.

மறுபுறத்தில் அரசின் பயனற்ற, டாம்பீக விழாக்களும், ஆலாபரணங்களும், கேளிக்கை நிகழ்வுகளும் குறைவின்றித் தொடர்கின்றன.

ஊழல், மோசடி, குளறுபடிகள் அரசின் கருவூலத்தில் பெரும் தாக்கத்தையும் பின்னடைவையும் ஏற்படுத்தியிருக்கின்றன. சுகாதார அமைச்சகக் கொள்வனவில் இடம் பெற்ற மோசடி இவ்விடயத்துக்கு நல்ல உதாரணம்.

விதிக்கப்பட்ட வரிகளை - அரச வருவாய்களை - அறவிடுவதில் வினைத்திறன் உடையவையாக அரசுக் கட்டமைப்புகள் இயங்கவில்லை என்பதும் கண்கூடான உண்மை.

அதிக வரிகளை விதித்து, பொதுமக்கள் மீது அதீத அழுத்தத்தை பிரயோகிப்பதை விடுத்து, அரச வருமான இழப்புக்களைத் தடுத்து, வீண் செலவுகள் மற்றும் ஊழல்களை வடிகட்டுவதன் மூலம் நாட்டில் சமநிலையான நிதி கையாள்கையைப் பேண முடியும் என கோப்குழு சுட்டிக்காட்டும் விடயத்தை அரசுத் தலைமை உயர்ந்த மட்டத்தில் பரிசீலித்து, தனக்கான வழிகாட்டலாக அதை பற்றி கொள்ள வேண்டும்.

அதைச் செய்தால் வரி விதிப்புச் சுமை நாட்டு மக்களுக்கு அழுத்தம் தராமல் சமாளிக்க முடியும்

# 2024 மக்களவைத் தேர்தலில் ஆந்திராவில் மும்முனைப் போட்டி





இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சென்னை மாகாணத்தில் இருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முதல் மொழிவாரி மாநிலம் ஆந்திரப் பிரதேசம்.

பரப்பளவில் 7 ஆவது பெரிய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் 26 மாவட்டங்கள், 175 சட்டப்பேரவைத் தொகுதிகள், 25 மக்களவைத் தொகுதிகள் உள்ளன.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஆந்திரப் பிரதேசத்தின் மக்கள் தொகை 4 கோடியே 96 லட்சம். கிராமப்புறங்களில் 70 வீத மக்களும் நகர்ப்புறங்களில் 30 வீத மக்களும் வசிக்கிறார்கள். பாலின விகிதத்தை எடுத்துக்கொண்டால், ஆயிரம் ஆண்களுக்கு 996 பெண்கள் இருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தின் அலுவல் மொழி தெலுங்கு. கூடுதல் அலுவல் மொழி உருது ஆகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து காங்கிரஸ் கட்சியே இம்மாநிலத்தை அதிக காலம் ஆட்சி செய்திருக்கிறது. இரண்டாம் இடத்தில் தெலுங்கு தேசம் இருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 15 பேர் முதல்வர்களாக இருந்திருக்கிறார்கள். தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த 3 பேர் முதல்வர்களாக இருந்திருக்கிறார்கள். காங்கிரசில் இருந்து பிரிந்து ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியை தோற்றுவித்த ஜகன் மோகன் ரெட்டி தற்போது மாநிலத்தின் முதல்வராக இருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்தில் 50 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. எனினும், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், தெலுங்கு தேசம் ஆகிய இரண்டு கட்சிகளே 30 சதவீதத்துக்கும் அதிகமான வாக்கு வங்கியுடன் அதிக செல்வாக்கோடு இருக்கின்றன. காங்கிரஸ், பா.ஜ.க, ஜனசேனா ஆகிய 3 கட்சிகளும் ஓரளவு செல்வாக்கோடு இருக்கின்றன.

மக்களவைத் தேர்தலோடு ஆந்திரப் பிரதேசத்தின் சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடைபெற இருக்கிறது. 25 மக்களவைத் தொகுதிகளுக்கும், 125 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக மே 13 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற இருக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் மும்முனைப் போட்டி நிலவுகிறது. ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி இந்த தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறது. 25 மக்களவைத் தொகுதிகளுக்கும், 175 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை நியமித்து தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார் கட்சியின் தலைவரும் மாநிலத்தின் முதல்வருமான ஜகன் மோகன் ரெட்டி.

தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பா.ஜ.க, தெலுங்கு தேசம் கட்சி, ஜன சேனா ஆகியவை போட்டியிடுகின்றன. தெலுங்கு தேசம் 17 மக்களவைத் தொகுதிகளிலும், பா.ஜ.க. 6 மக்களவைத் தொகுதிகளிலும், ஜன சேனா கட்சி 2 மக்களவைத் தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

சட்டப்பேரவைத் தேர்தலில், தெலுங்கு தேசம் கட்சி 144 தொகுதிகளிலும், ஜன சேனா கட்சி 21 தொகுதிகளிலும், பா.ஜ.க. 10 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

இண்டியா கூட்டணி சார்பில், காங்கிரஸ், சி.பி.ஐ, சி.பி.எம். ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்கின்றன.

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் 23 தொகுதிகளிலும், சி.பி.ஐ மற்றும் சிபிஎம் ஆகியவை தலா ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன. சட்டப்பேரவைத் தேர்தலில், காங்கிரஸ் 159 தொகுதிகளிலும், சி.பி.ஐ. மற்றும் சிபிஎம் ஆகியவை தலா 8 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

# அமித் ஷா பயணித்த ஹெலிக்கொப்டர் சற்று நிலை தடுமாறியதால் பதற்றம்



பிஹாரில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பயணித்த ஹெலிக்கொப்டர், புறப்படும்போது சற்று நிலை தடுமாறியது. நல்வாய்ப்பாக விபத்து ஏதும் நேரிடவில்லை.

பிஹார் மாநிலத்தில் முதல்வர் நிதிஷ் குமாரின் ஜே.டி.யு. கட்சியுடன் இணைந்து போட்டியிடுகிறது பா.ஜ.க. மொத்தம் உளள தொகுதிகளில் 17 தொகுதிகளில் பா.ஜ.கவும், 16 இடங்களில் நிதிஷ் குமாரின் ஜேடியு கட்சியும் மற்ற இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளும் போட்டியிடுகின்றன.

இந்நிலையில், பிஹாரின் பெகுசராய் நகரில் நேற்று நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் பா.ஜ.க. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா கலந்து கொண்டார்

இதன்பின் ஹெலிகொப்டர் மூலமாக அடுத்த பிரச்சாரத்துக்கு செல்லவிருந்தார். இதற்காக அவர் ஹெலிகொப்டர் மூலமாக புறப்பட்டார். ஆனால், ஹெலிக்கொப்டர் புறப்படும் முன் கட்டுப்பாட்டை இழந்து சற்றே நிலை தடுமாறியது. ஒரு கட்டத்தில் மேலே பறக்க முடியாமல், கீழே தரையை தொடும் அளவுக்கு சென்றதால் பதற்றம் நிலவியது.

எனினும் சில விநாடிகளில் மீண்டும் வானத்தை நோக்கி பறந்து நல்வாய்ப்பாக விபத்தில் இருந்து தப்பியது. இதனால், ஹெலிக்கொப்டரில் இருந்து அமித் ஷா உள்ளிட்டோர் உயிர் தப்பினர். இது தொடர்பான காணொலி காட்சிகள் வெளியாகியுள்ளன.

# இஸ்ரேல் பிரதமர் விரைவில் கைது: கவலை தெரிவிக்கும் அமெரிக்கா

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு போர் குற்றத்தின் காரணமாக விரைவில் கைது செய்யப்படுவார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்தோடு, பலஸ்தீனம் உடனான போரில் அதிகமான விதிமீறல்கள் இடம்பெற்றுள்ளன எனவும் இவ்வாறான தொரு போருக்கே அவசியம் இல்லை என்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்த நிலையில், இஸ்ரேல் – ஹமாஸ் போரில் 34, 000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அதில், பெண்களும், குழந்தைகளுமே அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, போர் நிறுத்ததை கோரி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பலஸ்தீன ஆதரவு நாடுகளின் தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ரத்து செய்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், தனது நட்பு நடான இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது



செய்ய சர்வதேச நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்படவிருப்பது தொடர்பில் அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

# தன்பாலின ஈர்ப்பு திருமணங்களுக்கு தடை; ஈராக் அரசாங்கம் சார்பில் புதிய சட்டம்





தன்பாலின ஈர்ப்பு திருமணங்களுக்கு தடை விதிக்கும் வகையில் ஈராக் அரசாங்கம் சார்பில் புதிய சட்டமொன்று இயற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சட்டத்தில் தன்பாலின ஈர்ப்பு திருமணம் செய்து கொள்வோருக்கு அதிகபட்சம் 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த புதிய சட்டமானது மனித உரிமைகளுக்கு எதிரானதென சில அமைப்புகள் கருத்து தெரிவித்துள்ளன.

அந்த நாட்டில் வசிக்கும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் மீது தாக்குதலாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தன்பாலின ஈர்ப்பு திருமணங்களை சட்டவிரோதமாக அறிவிக்கும் சட்டம் அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டு விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த சட்டம் ஈராக் சமூகத்தை ஒழுக்க சீர்கேடுகளில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் இயற்றப்பட்டுள்ளதுடன் தன்பாலின ஈர்ப்பு திருமணங்கள் மற்றும் விபச்சாரத்தை ஒழிக்கும் இந்த புதிய சட்டத்தை மீறுவோருக்கு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் மற்றும் அதிகபட்சம் 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தன்பாலின ஈர்ப்பு அல்லது விபச்சாரத்தை ஊக்குவிப்போருக்கு அதிகபட்சம் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுமென ஈராக் அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிலிப்பைன்ஸில் கடும் வெப்பம்

பிலிப்பைன்ஸில் கடும் வெப்பம் நிலவி வருவதால் இரண்டு நாள்கள் அனைத்து அரசாங்க பாடசாலைகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் மாணவர்களின் கற்றலுக்கான மாற்று ஏற்பாடாக இணையவழி கல்வியை மேற்கொள்ள அந் நாட்டு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிலிப்பைன்ஸின் தலைநகர் பகுதியில் அடுத்த மூன்று நாட்களில் வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை எட்டக்கூடும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உணரப்படும் வெப்பநிலையான வெப்பக் குறியீடு 45 டிகிரி செல்சியஸ் என்ற அபாயகரமான மட்டத்திற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் காரணமாக வெப்ப பக்கவாதம் கூட ஏற்படலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



இதேவேளை, மே மாதம் இரண்டாவது வாரம் வெப்பக் குறியீடு 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஜயதாஸவின் நியமனம் சு.கவின் யாப்புக்கு முரண்

## சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவிப்பு

“சுதந்திர கட்சியின் பதில் தவிசாளராக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை கட்சியின் யாப்புக்கு முற்றிலும் விரோதமானது. மைத்திரிபாலவுடன் ஒன்றிணைந்து தனது நற்பெயரை விஜயதாஸ இல்லாதொழித்துக் கொள்ள கூடாது.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சுதந்திர கட்சியின் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ள நிலையில் கட்சியின் பதில் தவிசாளராக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமை சுதந்திர கட்சியின் யாப்புக்கு முற்றிலும் விரோதமானது.

பல அரசியல் கட்சிகளில் உறுப்பினராக பதவி வகித்த விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் நோக்கத்தில் சுதந்திர கட்சிக்கு வருகை தந்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன வீதியில் செல்பவர்களை அழைத்து வந்து அவர்களை நிறைவேற்று சபையில் அமரச் செய்து



தவறான தீர்மானங்களை எடுத்துள்ளார். நாட்டின் நீதியமைச்சரான விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அரசியல் கட்சிகளின் யாப்பு மற்றும் பொது சட்டம் பற்றி கூற வேண்டிய தேவை இல்லை.

சுதந்திரக் கட்சியை சீரழித்த மைத்திரிபால சிறிசேனவுடன் ஒன்றிணைந்துள்ள நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது நற்பெயரை இல்லாதொழித்துக் கொள்ள கூடாது என்பதை மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.”– என்றார்.

# வெலிகமவில் தனியார் பாடசாலையில் நேற்றுத் திரும்பவும் தீ விபத்துச் சம்பவம்

வெலிகம பிரதேசத்தில் உள்ள தனியார் மகளிர் பாடசாலை ஒன்றில் நேற்றுத் தீ பரவல் ஏற்பட்டது.

பாடசாலையின் விடுதி அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மாத்தறை தீயணைப்புப் பிரிவு, வெலிகம பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

இந்தத் தனியார் மகளிர் பாடசாலையில் கடந்த மார்ச் 3 ஆம் திகதியும் தீ விபத்து ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# காஸா சிறுவர் நிதியத்திற்கு நிவாரணம் வழங்குவதற்கான காலஅவகாசம் நீடிப்பு

காஸாவில் இடம்பெற்ற மோதல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் சிறுவர் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கான கால அவகாசம் மே மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்திற்கான நன்கொடைகளை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையின் (Taprobane Branch) 7040016 என்ற கணக்கில் வரவு வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டை 077 97 30 396 என்ற வட்ஸ் அப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




# போதையில் தனியார் பஸ்ஸை செலுத்திய சாரதி வவுனியாவில் ஏ9 வீதியில் கைது!

(கே.வசந்தன்)

வவுனியா, ஏ9 வீதியில் மது போதையில் தனியார் பஸ்ஸைச் செலுத்திய சாரதி ஒருவர் நேற்றுஜ் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா, போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதியில் போக்குவரத்து பொலிசார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த போது ஏ9 வீதியில் பயணித்த தனியார் பஸ் ஒன்றின் சாரதி மது போதையில் பஸ்ஸைச் செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பஸ் சாரதி கைது செய்யப்பட்டார். பஸ்ஸூம் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளின் பின் சாரதியை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மே தின பேரணிக்காக பஸ்களை கோரியுள்ள அரசியல் கட்சிகள்

இம்முறை மே தின பேரணியை முன்னிட்டு பல அரசியல் கட்சிகளும் பஸ்களை கோரி விண்ணப்பித்துள்ளன என இலங்கை போக்குவரத்துள சபை தெரிவித்துள்ளது.

இந்த கோரிக்கைகளுக்கு அமைவாக கட்சிகளுக்கு தேவையான பஸ்களை வழங்குமாறு அனைத்து டிப்போக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை கூறியுள்ளது.

விசேடசுற்றுலாப்பயணங்களுக்கான பஸ் கட்டணத்தின் அடிப்படையில் இவை கட்சிகளுக்காக வழங்கப்படவுள்ளன.

இதனிடையே, இம்முறையும் பல அரசியல் கட்சிகளால் மே தினக் கூட்டங்களுக்காக பஸ்களை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# அங்கொட லொக்காவின் உதவியாளர் சிக்கினார்

திட்டமிட்ட குற்றசெயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலியான பெயரில் பெற்றுக் கொண்ட கடவுட்சீட்டுடன் வெளிநாட்டிற்குச் செல்ல முற்பட்ட வேளையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி அடையாள இயந்திரத்தின் மூலம் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

47 வயதான சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# கல்வியங்காட்டு மரக்கறிச் சந்தை வியாபாரிகள் நேற்றுக் காலை முதல் சேவைப் புறக்கணிப்பில்



வீதியோரத்தில் காணப்படுகின்ற மரக்கறி வியாபார நிலையத்தை அகற்றுமாறு கோரி கல்வியங்காட்டு மரக்கறிச் சந்தை வியாபாரிகள் நேற்றுக் காலை முதல் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ் மாநகர சபையின் ஆளுகைக் குட்பட்ட கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற மரக்கறி சந்தை வியாபாரிகளே போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட சந்தை வியாபாரிகள் கருத்து தெரிவிக்கை யில் –

எமது சந்தை யாழ் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்டு இயங்கி வரு கின்றது. நாம் சந்தை குத்தகை பணத் தையும் மாநகர சபைக்குச் செலுத்தி வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த மூன்று வருடங்களாக கொரோனா தொற்று ஏற்பட்ட காலத்திலிருந்து எமது சந் தைக்கு எதிரே உள்ள வீதியோரத்தில் தனியார் ஒருவர் மரக்கறி சந்தையை நடத்தி வருகின்றார்.

இது குறித்து நாம் யாழ் மாநகர சபைக்கு அறிவித்திருந்தோம். இந் நிலையில் மாநகர சபை தரப்பில் குறித்த பகுதி நல்லூர் பிரதேச சபைக்கு உரிய இடம் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது குறித்து நல்லூ ர் பிரதேச சபைக்கும் முறையிட்டோம்.

பின்னர் இதற்கு பொலிஸாரிடம் முறையிடுமாறும் கோரப்பட்டது.

பொலிஸாரிடமும் முறையிட்டோம். மாநகர சபையினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டப்பணம் விதிக்கபட்ட பொழுதிலும் அவர்கள் மேன்முறையீடு செய்து தற்பொழுதும் கடையை நடாத்தி வருகின்றார்கள்.

இந்நிலையில் நாம் வடமாகாண ஆளுநர் உட்பட சம்பந்தபட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் குறித்த விடயம் தொடர்பில் அறிவித்த பொழுதிலும் இதுவரை எதுவும் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித் தனர்.





# ஹட்டன் நகரில் கண்ட கண்ட இடங்களில் பிளாஸ்டிக்,பொலித்தீன் கழிவுகள் தீவைப்பு

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நகரில் முறையான கழிவகற்றல் திட்டம் இல்லாத சூழலில் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாள்களாக நகர சபை ஊழியர்களினால் குடியிருப்புப் பகுதிகளில் - கண்ட கண்ட இடங்களில் பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் பொலித்தீன் குப்பைகளுக்கு தீ வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சூழல் மாசடைந்து வருவதாக குடியிருப்பாளர்கள் கலக்கமடைந்துள்ளனர்.

நகரில் பல பகுதிகளிலும் பாரிய அளவில் பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன. இவ்வாறான உக்கா பொருள்கள் அனைத்தும் நகர சபை முன் வந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கண்ட கண்ட இடங்களில் அவற்றைத் தீ வைப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# போலி விசாவில் சிறுவனை லண்டனுக்கு கடத்த முயற்சி

## முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் கைது

போலியான பயண ஆவணங்கள் மூலம் 17 வயது சிறுவன் ஒருவனை லண்டனுக்கு அனுப்ப எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் எல்லைக் கண்காணிப்பு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த சந்தேகத்திற்கிடமான பெண் ஒருவர் சிறுவனுடன் லண்டன் செல்லத் திட்டமிட்டுள்ளார். எனினும் அவர்களின் பயண ஆவணங்கள் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக எல்லைக் கண்காணிப்புப் பிரிவுக்கு அதிகாரிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சோதனையில் பயண ஆவணங்கள் போலியானவை என்பது கண்டறியப்பட்டது. அதிகாரிகள் நடத்திய விசாரணையில், அந்தச் சிறுவன் தன்னுடன் வந்த பெண் தமது தாய் இல்லை என்றும், தனது தாய் புறப்படும் முனையத்தில் காத்திருக்கின்றார் என்பதையும் வெளிப் படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இரு பெண்களையும் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாகவும், குழந்தையின் முன்னேற்றத்திற்காகவும் சிறுவனை லண்டன் அனுப்ப முயற்சித்துள்ளனர் என அவர்கள் கூறியுள்ளனர்.

மனிதக் கடத்தலுக்குப் பொறுப்பான இங்கிலாந்தில் வசிக்கும் ஒருவர் தனது மனைவி மற்றும் மகனின் விவரங்களின் அடிப்படையில் சிறுவன் மற்றும் பெண்ணின் பயண ஆவணங்களை போலியாகத் தயாரித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# நேற்று யாழ்ப்பாணத்தில் புதிய கட்சி அங்குரார்ப்பணம் என்று அறிவிப்பு

ஐக்கிய மக்கள் கட்சி எனும் புதிய கட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் ஆரம்பித்து வைக்கபடுவதாக அந்தக் கட்சியின் உபதலைவர் அப்பையா இராஜவேந்தன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் புலேந்திரன் உதயகுமார் என்பவரை தலைவராக கொண்டு கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நாம் வெகுஜன அமைப்பாக செயற்பட்டு வருகின்றோம் .

கல்வி ,வாழ்வாதாரம், போரால் பாதிக்கப்பட்டோர் என பலதரப்பட்டோருக்கு சேவைகளை நாம் செயற் படுத்தி வருகின்றோம். அதனடிப் படையில் இன்று முதல் எமது சேவை களை ஐக்கிய மக்கள் கட்சி என்ற பெயரில் தொடர்ந்து முன்னெடுக்க வுள்ளோம்.

எமது மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் இலங்கையின் அரசமைப்பிற்குட்பட்டு செயற்படுத்த இருக்கின்றோம்.

தற்பொழுது எமக்கு தேர்தல் நோக்கமில்லை. இருந்தாலும் இது குறித்து தேர்தல் காலத்திலேயே இறுதி முடிவினை எடுப்போம். இன, மத, மொழி வேறுபாடின்றி பலதரபட்ட மக்களிற்காகவும் இணைந்து செயற்படவுள்ளோம்.

தமிழ் இனம்சார்ந்த பிரச்சினைகளுக்காக பல கட்சிகளும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்ற நிலையில் அந்த கட்சிகளின் கண்ணுக்கு புலப்படாத பொதுமக்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு சேவையாற்றுவது எமது நோக்கமாகும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் 3 உணவகங்கள் சீல் வைத்து மூடப்பட்டன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 03 உணவகங்களுக்கு சீல் வைப்பு.

2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டமு விதிக்கப்பட்டது.

திருநெல்வேலி பகுதியில் பொது சுகாதார பரிசோதகரால் உணவகங்கள் பரிசோதிக்கப்பட்டு, குறைபாடுகள் இனங்காணப்பட்ட உணவகங்களுக்கு திருத்த வேலைகளுக்கான அறிவுறுத்தல்கள் எழுத்து மூலமாக வழங்கப்பட்டு கால அவகாசமும் வழங்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில் திருத்த வேலைகள் பூர்த்தியானமை தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் மீள் பரிசோதனை கடந்த 25.04.2024 அன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொது சுகாதார பரிசோதகரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களைக் கருத்தில் கொள்ளாது அசண்டையீனமாக தொடர்ந்தும், சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 03 உணவகங்கள் பரிசோதனையில் சிக்கிகொண்டன.

இதனையடுத்து 03 உணவகங்களுக்கும் எதிராக திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் நேற்றைய தினம் தாக்கல் செய்யப்பட்டது.



வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதவான் செ.லெனின்குமார் மூன்று உணவகங்களிற்கும் மொத்தமாக 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தமையுடன் மூன்று உணவகங்களையும் திருத்த வேலைகள் நிறைவடையும் வரை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகருக்குக் கட்டளையி ட்டார்.

இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் மூன்று உணவகங்களும் சீல் வைத்து மூடப்பட்டன.

# இன்றைய ராசி பலன்கள் - 30.04.2024




இன்று அவ்வளவு எளிதாக எதையும் பெற முடியாது. எனவே கவனமாகவும் உறுதியாகவும் செயல் பட வேண்டிய நாள்.

பணியைப் பொறுத்தவரை இன்று பலன் தரும் நாளாக இருக்காது. இன்று கூடுதல் பணிகள் காணப்படும். என்றாலும் நீங்கள் நீங்கள் முறையான திட்டமிடல் மூலம் பணிகளை கையாள்வீர்கள்.

உங்கள் தாயுடனான கருத்து வேறுபாடு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். நீங்கள் சூழ்நிலையை பக்குவமாக கையாள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. உங்கள் ஒவ்வொரு பணத்தையும் கவனமாக செலவு செய்ய வேண்டும்.




இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷ யத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகு முறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறுகடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியம் மற்றும் திடகாத்திரம் பராமரிப்பீர்கள்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதற்றத்தைச் சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதற்றத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண் காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத்தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்திற்கு உகந்த தல்ல.இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.




நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம் பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.

பதற்றம் காரணமாக தலை வலி ஏற்படும். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.04.2024




இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியி ருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப் படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்வுக்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகா ரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.






# மட்டு. நகரில் 25 லட்சம் ரூபா பெறுமதியான 11 கஜமுத்துக்களுடன் ஒருவர் நேற்று கைது!






(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வைத்து 25 இலட்சம் ரூபா பெறுமதியான 11 கஜ முத்துக்களுடன் மயிலவெட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவர்கள் நேற்று மாலை 6 மணியளவில் மட்டு. காந்தி பூங்காவில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது மயிலவெட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கஜமுத்துக்களை வியாபாரம் செய்வதற்காக எடுத்து வந்து காத்துக்கொண்டிருந்தார். அங்கு மாறு வேடத்தில் இருந்த விசேட அதிரடிப் படையின் அவரைச் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்தனர்.

அத்துடன் வியாபாரத்துக்காக எடுத்து வந்த சட்டவிரோ தமான 25 இலட்சம் ரூபா பெறுமதியான 11 கஜமுத்துக்களை யும் மீட்டனர். சந்தேகநபரை விசாரணையின் பின்னர் நீதிமன் றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# புகைப்பிடிக்க ரூ. 52 கோடியை தினசரி செலவிடும் இலங்கையர்

இலங்கை மக்கள் புகைபிடிப்பதற்கு நாளொன்றுக்கு 52 கோடி ரூபாவை செலவிடுகின்றனர் என்சப் புள்ளி விவரம் வெளியாகி யிருக்கின்றது.

இத்தகவலை மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், புகைப்பழக்கம் காரணமாக நாளாந்தம் சுமார் 50 பேர் உயிரிழக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

83 வீதமான மரணங்கள் தொற்றாத நோய்களினால் ஏற்படுகின் றன எனவும், புகைபிடித்தல் இதற்கான முக்கிய காரணம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில்,இலங்கையில் வருடமொன்றுக்கு 2,300 சிகரெட் துண்டுகள் ஒவ்வொரு சுற்றுச்சூழலிலும் கிடக்கின்றன எனப் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது



# எலுமிச்சை, இஞ்சியின் விலை தொடர்ந்து வேகமாக அதிகரிப்பு



தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைத்த மரக்கறி களின் மொத்த விலை வீழ்ச்சியடைந்த போதிலும், எலுமிச்சை மற்றும் பச்சை இஞ்சியின் மொத்த விலை வேகமாக அதிகரித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ எலுமிச்சை 1000 ரூபா முதல் 1200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக அங்குள்ள வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், ஒரு கிலோ பச்சை இஞ்சி தற்போது 3,000 ரூபா முதல் 3,200 ரூபா வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுதாக தெரிவிக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அதிகளவு மரக்கறிகள் கையிருப்பில் உள்ள போதிலும் நுகர்வோர் அவற்றை கொள்வனவு செய்வதற்கு அங்கு வராத நிலை காணப்படுவ தாக பொருளாதார நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.